STC.No.3002025 DW1.திரு.செந்தில்குமார்
தேதி– 08.04.2026
எதிரி ஆஜர்.

<u>சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு புகார்தாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. புகார்தாரருக்கு எதிரி என்மூலம் அறிமுகம் ஆனார் என்றால் சரிதான். இந்த வழக்கில் எதிரி கேட்டுகொண்டதன் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன்எ ன்றால் சரிதான். எதிரி கூறியதன் பேரில் தான் வழக்கின் விபரங்கள் எனக்கு தெரியும் என்றால் சரிதான். எதிரிக்கு எங்கு எங்கு வரவு செலவு உள்ளது என்பதை குறித்து எனக்கு முழுமையாக தெரியாது என்றால் சரிதான். 2023 க்கு பின்பு எதிரிக்கும் புகார்தாரருக்கும் இடையே வரவு செலவு இருந்ததா என்பதை குறித்து எனக்கு நேரடியாக தெரியாது என்றால் தெரியும். எதிரி எனக்கு 15 ஆண்டுகளாக குடும்ப நண்பர் ஆவார். புகார்தாரர் எனக்கு 3 வருடம் காலமாக பழக்கம்.

2. நான் சொல்வது போல் எதிரி எனக்கு நீண்ட கால பழக்கமானவர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 15 ஆண்டு காலத்தில் எதிரியின் வரவு செலவு முழுவதும் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். எதிரி புகார்தாரரிடம் எனக்கு தெரியாமல் வரவு செலவு வைத்திருக்க வாய்ப்புள்ளதா என்றால் இல்லை. இவ்வழக்கின் வரவு செலவு விபரங்கள் எனக்கு தெரியாது என்றும், எதிரிக்கு கேட்டுகொண்டதன் பேரில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கும் புகார்தாரருக்கும் இடையே உள்ள வரவு செலவு சம்மந்தமாக நான் எனது Gpay மூலம் பணம் செலுத்தியுள்ளேன் என்றும், எதிரிக்கும் மேற்படி தொகைக்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல. புகார்தாரருக்கும், எனக்கும் இருந்த வரவு செலவு சம்மந்தமாக எங்களுக்குள் முரண்பாடு ஏற்பட்டது என்றும், அதனால் புகார்தாரருக்கு எதிராக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

3) 2023ம் வருடத்தில் எதிரிக்கு என்மூலம் ரூ.1 லட்சம் பணம் கொடுத்ததாகவும், சுந்தரம் பார்க் அருகே ரூ.40 ஆயிரம் புகார்தாரர்

வாங்கியதாகவும், நான் முதல் விசாரணையில் பொய்சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல. என்னிடம் தான் புகார்தாரர் ரூ.40 ஆயிரம் பணம் வாங்கினார். எனது சாட்சியம் ஏற்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

Taken down by me in the open court in the presence of accused read over to the witness and admitted by him to be correct

AMALANATHA KAMALAKANNAN S
Digitally signed by AMALANATHA KAMALAKANNAN S
Date: 2026.04.08 15:26:01 +0530

J.M, F.T.C(M.L),Uthamapalayam